பாதுகாப்பு அமைச்சு

# இலங்கை இராணுவம்

## விலைமனுக்கோரல் (IFB)

## இலங்கை இராணுவத்திற்கான பச்சை / உலர் உணவுப் பொருட்களை வழங்கல் மற்றும் விநியோகிப்பதற்கான பெறுகை- 2024

**ஒப்பந்த இலக்கம :- *S&T/03/DRY RATION/FRESH RATION/2024(14)***

**1.** 2024 ஆம் ஆண்டிற்கான முப்படைகளின் பச்சை/உலர் உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள கொள்முதல் குழுவின் தலைவரினால் **2024 ஜனவரி 01** தொடக்கம் **2024 டிசம்பர் 31** வரையான காலப்பகுதிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உணவு கீழ் காணும் நிலையங்கள் / முகாம்களுக்கு வழங்குவதற்கான முத்திரையிடப்பிட்ட விலைமனுக்கள் பொருத்தமான மற்றும் தகுதிவாய்ந்த வணிக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், சில்லரை விற்பனைாளர்கள் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றது.

**1.1 விநியோக இடம் மற்றும் தொடர்புடைய பிரிவுகள்**

**1.1.1 A பிரிவு - அனைத்து பச்சை உணவுப்பொருட்கள்**

| நிலையங்கள் / முகாம்கள் | | | | | | உணவு வகை |
|---|---|---|---|---|---|---|
| 1.1.1.1 | இயக்கச்சி | 1.1.1.33 | கட்டுபெத்த | 1.1.1.65 | பூநகரி | **அனைத்து பச்சை உணவு வகைகள்** (காய்கறிகள், பழங்கள்,மீன், இறைச்சி / உறைந்த உணவு, மட்டை உரித்த தேங்காய்,முட்டை (கோழி),பால் பொருட்கள்) |
| 1.1.1.2 | அம்பாறை | 1.1.1.34 | கட்டுநாயக்க | 1.1.1.66 | பான்கொல்ல | |
| 1.1.1.3 | அங்குனவெல்பெலஸ்ஸ | 1.1.1.35 | கரன்தெனிய | 1.1.1.67 | பூனானி | |
| 1.1.1.4 | அக்கராயன்குளம் | 1.1.1.36 | கேகாலை | 1.1.1.68 | புத்தளம் | |
| 1.1.1.5 | அக்கரைப்பற்று | 1.1.1.37 | கோஹம்பகஸ்ஹந்திய | 1.1.1.69 | புதுக்குடியிருப்பு | |
| 1.1.1.6 | அக்குறேகொடை (பத்தரமுல்லை) | 1.1.1.38 | கொக்கெலிய | 1.1.1.70 | ரன்தம்பே | |
| 1.1.1.7 | அல்லகந்தலே | 1.1.1.39 | கொஸ்கம | 1.1.1.71 | சேனபுர | |
| 1.1.1.8 | அம்பேபுஸ்ஸ | 1.1.1.40 | கொத்மலை | 1.1.1.72 | சிங்கபுர (பதவி சிறிபுர) | |
| 1.1.1.9 | பதுளை | 1.1.1.41 | குருநாகல் | 1.1.1.73 | சிங்கபுர (வெலிகந்த) | |
| 1.1.1.10 | பலல்ல | 1.1.1.42 | கோமாரிய | 1.1.1.74 | தந்திரிமலை | |
| 1.1.1.11 | பட்டலந்த | 1.1.1.43 | குருவிட்ட | 1.1.1.75 | தாராவிகுளம் | |
| 1.1.1.12 | தேவஹுவ | 1.1.1.44 | கிரான்சி | 1.1.1.76 | திரியாய | |
| 1.1.1.13 | பூஸ்ஸ | 1.1.1.45 | குகுலேகங்க | 1.1.1.77 | திருகோணமலை | |
| 1.1.1.14 | புத்தள | 1.1.1.78 | துனுக்காய் | 1.1.1.78 | துனுக்காய் | |
| 1.1.1.15 | தெஹியத்தகண்டிய | 1.1.1.46 | லக்ஷபான | 1.1.1.79 | உடவலவை | |
| 1.1.1.16 | திகன (மாபேரியதென்ன) | 1.1.1.47 | மாதம்பே | 1.1.1.80 | உக்குவலை | |
| 1.1.1.17 | தொம்பகொட | 1.1.1.48 | மாதுருஓயா | 1.1.1.81 | உன்னிச்சை | |
| 1.1.1.18 | தம்புள்ளை (இனாமலுவ) | 1.1.1.49 | மாங்குளம் | 1.1.1.82 | ஊவ-குடாஓய | |
| 1.1.1.76 | திரியாய | 1.1.1.50 | மத்தேகொட | 1.1.1.83 | வவுனியா | |
| 1.1.1.19 | எம்பிலிபிடிய | 1.1.1.51 | மாந்தோட்டம் | 1.1.1.84 | விசுவவமடு | |
| 1.1.1.20 | கஜசிங்கபுர | 1.1.1.52 | மன்னார் | 1.1.1.85 | வாகரை | |
| 1.1.1.21 | கனேமுல்ல | 1.1.1.53 | மாத்தறை | 1.1.1.86 | வாழைச்சேனை | |
| 1.1.1.22 | ஹொரவப்பொத்தான | 1.1.1.54 | மயுராபுர (நாகரவெவ) | 1.1.1.87 | வரணி | |
| 1.1.1.23 | இப்பொலோகம | 1.1.1.55 | மங்கிபிரிச் | 1.1.1.88 | வெல்லன்குளம் | |
| 1.1.1.24 | யாழ்ப்பாணம் | 1.1.1.56 | மொரவெவ | 1.1.1.89 | வெல்லன்குளம் | |
| 1.1.1.25 | கலாஓயா | 1.1.1.57 | நெடுங்கேனி | 1.1.1.90 | வேயங்கொடை | |
| 1.1.1.26 | கல்லடி | 1.1.1.58 | நாவுல | 1.1.1.91 | வெடித்தலதீவு | |
| 1.1.1.27 | கல்லாறு | 1.1.1.59 | நுவரெலியா | 1.1.1.92 | வீரவில | |
| 1.1.1.28 | கம்புறுபிட்டிய | 1.1.1.60 | ஒட்டுச்சுட்டான் | 1.1.1.93 | வெலிகந்த | |
| 1.1.1.29 | கல்லியடி | 1.1.1.61 | பதவி பராக்கிரமபுர | 1.1.1.94 | வெற்றிலைக் கேணி | |
| 1.1.1.30 | கனகராயன்குளம் | 1.1.1.62 | பெலவத்தை | 1.1.1.95 | யாலை பலட்டுபானை | |
| 1.1.1.31 | கண்டி | 1.1.1.63 | பேசாழை | | | |
| 1.1.1.32 | கதிர்காமம் | 1.1.1.64 | பருத்தித்துறை | | | |

**1.1.2 B பிரிவு - மூல உணவு வகைகள்**

| நிலையங்கள்/முகாம்கள் | பச்சை உணவு வகைகள் |
|---|---|
| 1.1.2.1 பனாகொடை<br>1.1.2.2 அநுராதபுரம்<br>1.1.2.3 ஹிங்குரக்கொடை<br>1.1.2.4 காங்கேசன்துறை<br>1.1.2.5 முல்லைத்தீவு<br>1.1.2.6 கிளிநொச்சி<br>1.1.2.7 தியத்தலாவை<br>1.1.2.8 இரத்மலானை | (i) காய்கறிகள்<br>(ii) பழங்கள்<br>(iii) மீன்<br>(iv) இறைச்சி பொருட்கள்/உறைந்த உணவு<br>(v) மட்டை உரித்த தேங்காய்<br>(vi) கோழி முட்டை<br>(vii) பால் பொருட்கள்<br>(viii) Co 3 Grass (தியத்தலாவ மற்றும் இரத்மலான முகாம்களுக்கு மட்டும்) |

**1.1.3 C பிரிவு -உலர் உணவு வகைகள்**

| நிலையங்கள்/முகாம்கள் | உலர் உணவு வகைகள் |
|---|---|
| **குழு (இ) பிரதான முகாம்கள்**<br>1.1.3.1 பனாகொடை<br>1.1.3.2 அநுராதபுரம்<br>1.1.3.3 ஹிங்குரக்கொடை<br>1.1.3.4 காங்கேசன்துறை<br>1.1.3.5 முல்லைத்தீவு<br>1.1.3.6 கிளிநொச்சி<br>1.1.3.7 தியத்தலாவை<br>1.1.3.8 இரத்மலானை | உலர் உணவுப்பொருட்கள் (168 வகைகள்) |

**1.2** ஒவ்வொரு உணவு வகையிலும் உள்ள உணவுப் பொருட்கள் தொடர்பான விவரக்குறிப்புகள் மற்றும் பிற விபரங்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்படும். விநியோகிக்கப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் நல்ல தரம் வாய்ந்தவையாகவும் மனித நுகர்வுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட தரங்கள் மனு ஆவணத்திலும் அதன் இணைப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், உணவுப்பொருட்களை விநியோகித்தல் 1980 ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இடம்பெறவேண்டும்.

**1.3 விலைமனுவானது ஒவ்வொரு நிலையம்/ முகாம் அடிப்படையிலும் உணவு வகைப்படுத்தல் அடிப்படையிலும் சமர்பித்தல் வேண்டும்.**

1.3.1. ஒரு நிலையம் / முகாம் அடிப்படையில் மற்றும் உணவு வகைப்படுத்தல் அடிப்படையில் வெவ்வேராக விலைமனு வழங்குதல் வேண்டும். குறிப்பிட்ட விலையில் ஒரு நிலையத்தின், முகாமின் குறித்த வகைப்படுத்தல் விலை மனுவிற்காக விலைமனுதாரர் குறித்த வகைப்படுத்தலில் உள்ள அனைத்து உணவு பொருட்களுக்கும் விலைமனு வழங்க விலைமனுதாரர் தவரும் பட்சத்தில் அத்தகை விலைமனுவானது பதிலளிக்காததாக கருதப்படும்.

1.3.2. ஒவ்வொரு மனுதாரரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவு வகைகளையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விநியோக இடங்களையும் கீழே காட்டப்பட்டுள்ளபடி தனித்தனியாக மனுக்களை இடலாம். அதன்படி, மனுதாரரின் திறன் மற்றும் தகுதிகளுக்கு ஏற்ப மனுக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**1.3.2.1 "அ" - பச்சை உணவுப் பொருட்கள் வழங்கும் பிரிவு (தனிப்பட்ட முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 95 மனுக்கள் இருப்பதுடன், அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

**1.3.2.2 "ஆ" - உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் பிரிவு (தனிப்பட்ட முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 58 மனுக்கள் இருப்பதுடன், (08 முகாம்கள் x 07 உணவு வகைகள் = 56 மனுக்கள் + 02 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

**1.3.2.3 "இ" - உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் (தனிப்பட்ட முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 1344 மனுக்கள் இருப்பதுடன், (08 முகாம்கள் x 168 உணவு வகைகள் = 1344 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகஸ்தர்களினால் ஒப்பந்தங்களின்படி ஒவ்வொரு விநியோக இடங்கள் / முகாம்கள் மற்றும் அலகுகளுக்கு உணவுகளை கொண்டு செல்வதற்கான பொறுப்பு அவர்களையே சாறும். தனிப்பட்ட விநியோக இடங்கள்/முகாம்கள் மற்றும் அலகுகளுக்கு பற்றிய விபரங்கள் மனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. அரச கொள்முதல் வழிகாட்டல் 2006 இன் 3.2 இற்கு அமைவாக தேசிய மனுக்கோரல் போட்டி முறைமைக்கு அமைவாக செயற்படுத்தப்படும். வெளிநாட்டு மனுதாரர்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4. மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டிலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

5. கேள்வியுடன் தொடர்புடைய தகுதிகளை நிரூபிக்கும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். தகுதிக்கு பிந்தைய தேர்வில், குறைந்தபட்ச கேள்விகளைச் சமர்ப்பித்து மதிப்பீடு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச ஒப்பந்தத் தொகை, மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான வழிமுறையின் கீழ் அளவு மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்படும். ஆரம்ப மனு மதிப்பீட்டிற்கு பின்வரும் குறைந்தபட்ச தகுதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

5.1 உணவு வழங்கல் துறையில் குறைந்தபட்ச சராசரி ஆண்டு வருவாய் 2 நிதியாண்டுகளுக்கு முந்தைய 3 ஆண்டுகளுக்குள் **ரூ.10 மில்லியன்.** அந்தந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.2 திரவ சொத்துக்களின் குறைந்தபட்ச அளவு (நிதி அறிக்கைகள் 2022/2023 அடிப்படையில்) **ரூ.5 மில்லியன்.** (காசு மீதி, வங்கி மீதி, குறுகிய கால முதலீடுகள் மற்றும் பெறுவகைள்) நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2022/2023 நிதியாண்டிற்கான மனுதாரர் கணக்காய்வு செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தால், மனுதாரர் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை **2023.08.30** அன்று அல்லது **அதற்கு முன் தகுதி சரிபார்ப்பு கட்டத்தில்** சமர்ப்பிக்க வேண்டும்.

5.3 இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வணிக வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால் இந்த மனுக்கோரலுக்காக மட்டும் வழங்கும் குறைந்தபட்ச கடன் வரம்பு **ரூ.05 மில்லியனாக** இருக்க வேண்டும்.

5.4 **பச்சை உணவுப் பொருட்களை** வழங்குவதற்காக, மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு/வாடகைக்கு பெற்றுக்கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். கூடுதல் தகவல்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

5.5 **உலர் உணவுப் பொருட்களை** வழங்குவதற்காக, மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், குளிர் அறைகள்.'.உறைவிப்பான் மற்றும் குளிர் டிரக் வசதிகள் (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு.'.வாடகைக்கு பெற்றுக்கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். கூடுதல் தகவல்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

5.6 கடந்த 03 ஆண்டுகளில் 02 ஆண்டுகள் உணவு மூலப்பொருள் விநியோகத்தில் முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

6. மனு ஆவணங்கள் வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல் மற்றும் மனுக்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்.

| | |
|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் ஆரம்ப திகதி | **- 2023.06.21** |
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | **- 2023.07.23 பி.ப.3.00 மணி வரை** |
| மனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி மற்றும் நேரம் | **- 2023.07.24 மு.ப.9.00 மணி வரை** |
| மனுக்கள் திறக்கும் திகதி மற்றும் நேரம் : (பனாகொடையில்) | **- 2022.07.24 மு.ப.10.00 மணிக்கு** |

7. மனுக்கள் தொடர்பான கூட்டம் **2023.07.06 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு முதலாவது மாடி, நந்திமித்ர அரங்கம், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சின் தலைமையக வளாகம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரியில் இடம்பெறும்.

8. கீழ் பந்தி 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் தலைமை கொள்முதல் அதிகாரியிடம் எழுத்துமூல கோரிக்கையினை சமர்ப்பிபதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு தனிப்பட்ட விநியோக இடங்கள்/ முகாம்கள்/அலகுகள் மற்றும் துணை அலகுகளுக்கு உரிய மனுவிற்கும் வெவ்வேராக மீள வழங்கப்படாத கட்டணம் நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்ட சுற்றறிக்கை **2016 ஜுன் 17 ஆம் திகதி** 06/2016 இன் படி மேற்கொள்ளப்படும். (ஒவ்வொரு மனுக்களுக்கும் பொருத்தமான மீள வழங்கப்படாத கட்டணங்கள் தொடர்பான தகவல்கள் தலைமை கொள்முதல் அதிகாரியிடம் கீழே பந்தி 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.)

9. மனுதாரர் மனு சமர்ப்பிப்பதற்காக மனு ஆவண கோப்பினை மட்டுமே பயண்படுத்தல் வேண்டும். அனைத்து முத்திரையிடப்பட்ட மனுக்களும் பிரதிகளுடன் பதிவுத்தபாலின் மூலம் அனுப்பவேண்டும் அல்லது **இராணுவ நூலகம், பாதுகாப்பு படைத் தலைமையகம் (மேற்கு), இராணுவ முகாம் பனாகொட, ஹோமாகம** எனும் விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியினுள் மேலே பந்தி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன் இட வேண்டும்.

10. மனுக்கள் திறக்க நியமிக்கப்பட்ட நேரத்தில் மனுக்கள் திறக்கப்படும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்களை திறப்பதற்காக மனுதாரர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு கலந்து கொள்ளமுடியும்.

11. முன்வைக்கப்படும் மனுக்களின் செல்லுபடிகாலம் **2024 மார்ச் மாதம் 31** ஆம் திகதி வரையாகும்.

12. மனுக்களுடன் **2024 ஏப்ரல் மாதம் 30** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் மனுக்காப்புறுதி பிணையையும் **செயலாளர் பாதுகாப்பு அமைச்சு** எனும் பெயருக்கு முன்வைக்கவேண்டும். அந்த காப்புறுதிப்பிணைகள் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வணிக வங்கி ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் அற்ற மீள்ளளிக்கப்படாத பணமாக மாற்றிக்கொள்ளக்கூடிய காப்புறுதிப்பிணையின் ஆரம்ப பிரதியுடன் வழங்க வேண்டும். (குறித்த வங்கியின் உறுதிப்படுத்தப்பட்ட இலட்சினை பெறிக்கப்பட்ட) மனு காப்புறுதிப்பிணையின் பெறுமதி கொள்முதல் செய்யும் வழிகாட்டல்கள் 2006 ஆம் ஆண்டின் படி மனு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13. மனுதாரரினால் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்றே தேவைப்படின் உற்பத்தி அனுமதி சான்றிதழையும் முன்வைக்க வேண்டும்.

14. மனுதாரர் குறிப்பிட்ட பொருட்களுக்கான மாதிரிகளை மனு ஆவணத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். **கொடுக்கப்பட்ட காலத்திற்குள் மாதிரியை சமர்ப்பிக்க மனுதாரர் தவறினால்,** தொடர்புடைய மனுக்கள் மேலதிக மதிப்பீட்டிற்கு கருதப்படாது, மேலும் பதிலளிக்காத மனுக்களாக நிராகரிக்கப்படும்.

15. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியுடைய மனுதாரர்கள் மேலதிக விபரங்களை இராணுவ தலைமையக பணிப்பாளர் (வழங்கல் மற்றும் போக்குவரத்து) காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை இலவசமாக 16ஆம் உருப்படியில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் **2023.06.21** ஆம் திததியில் இருந்து **2023.07.23** ஆம் திகதி வரை கிழமை நாட்களில் **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரை பரீட்சித்துக்கொள்ளமுடியும்.

16. மேலே குறிப்பிடப்பட்ட விலாசம்,


கவனத்திற்கு : பணிப்பாளர் (வழங்கல் மற்றும் போக்குவரத்து)

விலாசம் : இராணுவத்தளபதி
இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை.

தொலைபேசி : 011 2302569, 011 2302568

தொலைநகல் : 011 2302569

மின்னஞ்சல் : dtesandt@army.lk
dtesandt0@gmail.com


**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு**
**(முப்படைகளுக்கான மூல மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல்)**
**பாதுகாப்பு அமைச்சு**

**2023.06.21**